[29th January 1966

Public Prosecutors in the State

* 12 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to make the posts of Public Prosecutors in the State as full time posts ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : பப்ளிக் ப்ராஸிக்யூடர்கள் பெரும்பாலோர் முழு நேர ஊழியர்களாக இப்பொழுது வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை ஆராய்ந்து, அவர்களை நிரந்தரமான ஊழியர்களாக நியமித்து, அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் அதிகமாகக் கொடுக்கமுடியும் என்பதை உயர் நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இந்த யோசனையைக் கூட அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிர்வாக முறை எந்த விதமான பிரச்னைக்கும் இடமில்லாமல் இருக்கிறது, நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது, இவர்கள் கொடுத்திருக்கிற யோசனையைக் கூட உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : பப்ளிக் ப்ராஸிக்யூடர்களை நிரந்தரமான ஊழியர்களாக வைக்காமலும், நல்ல ஊதியம் அவர்களுக்குக் கொடுக்காமலும் இருக்கிற காரணத்தினால் சில தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. நீதிமன்றத்தில் அவர்கள் நீதியை எடுத்துச் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுத்து, அவர்களை நிரந்தரமான ஊழியர்களாக வைத்தால் தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையால், இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

MR. SPEAKER : It is only a suggestion.

பஞ்சாயத்து தேர்தல்களுக்கான பிரயாணப்படி

* 13 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கென அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பிரயாணப்படி இதுவரை கொடுக்கப்படவில்லை என்று திருநெல்வேலி மாவட்டம், நாசரத் ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து முறையீடுகள் ஏதேனும் பெறப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?